# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### வாசிப்பு – அதிமேற் பிரிவு (7ஆம் 8ஆம் 9ஆம் தர மாணவர்கள்)

# விபுலானந்த அடிகள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈழம் தந்த அரும்பெரும் அறிஞராக விளங்கியவர் விபுலானந்த அடிகளாவர். அவர் தமிழுலகம் கண்ட பேரறிஞர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டவர். தம் தாய்மொழிக்கு அளப்பரிய பணிகள் புரிந்தவர். தமிழ்ச் சிறாரின் வளர்ச்சிக்கு பயன்மிக்க பணிகள் பல புரிந்தவர். ஆசிரியர், கல்லூரி முதல்வர், பேராசிரியர், நாளிதழாசிரியர், நூலாசிரியர் முதலான பல பொறுப்புக்களையும் அவர் வகித்துள்ளார்.

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் இலங்கையின் கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் அவர் பிறந்தார். அவருடைய இளமைக் காலப் பெயர் மயில்வாகனன் ஆகும். இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளைக் கற்றார். பயிற்றப்பட்ட ஆசிரியராக தமது பணியினை ஆரம்பித்த இவர் இலண்டன் பல்கலைக்கழக அறிவியற் பட்டதாரியானார். ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முதல்வராகி கல்லூரிக்கு அளப்பரிய தொண்டு புரிந்தார். அவரின் உள்ளம் துறவை நாட ஆயிரத்து தொளாயிரத்து இருபத்து நான்கில் முழுத் துறவியானார். அன்று முதல் சுவாமி விபுலானந்தர் என்ற துறவுப்பெயர் வழங்கப் பெற்றார்.